வைத்திய அட்டவணை.
(சிறுநாகச் செந்தூரம்)
வேதை.

199

266

266

⁂⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*

சி.வை. குப்புசாமி செட்டியார்,

"சிறுநாகச் செந்தூர வேதை"

வைத்திய அட்டவணை கட்டு-13.

காவேரிப் பட்டபணம், 1+2.

சேலம்.

⁂⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*⁂*

Verified
Sundaram [illegible]
5/7/63

Note

Prescriptions contained herein, ~~xx~~ mostly relate to alchemy.

[signature] 5/1/63

268

தேதி:- 25.5.63.
ஓலைச் சுவடியின் பெயர்:- சிறுநாகச் செந்தூர வேதை. கட்டு-13.
உரிமையாளரின் பெயர்:- சி.வை.குப்புசாமி செட்டியார்.
இடம்:- காவேரிப்பட்டணம், சேலம்.

***

சிறுநாகச் செந்தூரவேதை.

பால் துத்தம் எள்ளுப் போலே பொடி செய்து துணியில் கட்டி அரைக்கீரைச் சாறு
எருமை ஆட்டாம் கொடிச் சாறு, அளிஞ்சிப் பருப்பு அரைச்சு ஒரு பலம் துத்தம் பொடி
பண்ணி கலக்கி முன்னீர் சாறு வார்த்து எல்லாங் கரைத்து டோலேந்திரமாகக் கட்டி
எரிக்க சுத்தியாம். துத்தத்தைக் கழுவிப் பேரட்டு முன்பு எரித்த சாத்தைப் பார்த்து
திசையில் வைக்கவும். பின்பு சீலை மண்ணு செய்து உலர வைத்து குக்குட புடம் வைக்கவும்.
செந்தூரமாம். அந்த செந்தூரம், அந்த நாகத்துக்கு நாலுக் கொன்று கொடுக்கக்
கட்டும். கல் பலகரை எருக்கம் பழுப்புச் சாத்திலரைத்துப் பின்பு செம்பருத்திக் காய்ச்
சாத்தில் அரைத்து முச்சியில் வைத்து மூடி சீலை மண் செய்து குக்குடபுடமிட செந்தூரமாகு
இந்தச் செந்தூரம் அந்த நாகத்துக்கு நாலில் ஒரு பங்கு கொடுக்க கட்டும். சங்கு,
சுண்ணும்பு, மரு தோணியிலே தேங்காய் அளவு அரைத்து புது சுண்ணும்பு
தேங்காய் மாத்திரம் இந்த வகை மூன்றும் சமமாய் நிறுத்துக் கொண்டு தண்ணீர் வார்த்துத்
தெளிய விட்டு நாலு விகை யிறுத்துத் தெளிய வைத்து இறுத்து தண்ணீரை ஒரு சட்டியில் வார்
த்துக் காய்ச்சிக் குழம்பாம். பின்னையும் காய்ச்ச உப்பு போலே குழம்பாம். பிறகு சுத்
தி பண்ணின நாகம் நடுவே வைத்து கீழு மேலும் கொளம்பு மூடி அது மேல் ஓடு மூடி
நாலு சீலை மண்ணு செய்து கெசபுடம் போட செந்தூரமாம். பிறகு தங்கம் ஒரு பண
விடையும், வெள்ளி பத்து பணவிடையும் உருகிற முகத்திலே இரண்டு பணவிடை செந்தூரம்
மிளகிலே வைத்து உருட்டிப் போட மாத்து எட்டுக் காணும். நல்ல வித்தை.

<u>கெந்தக வித்தை</u>:-

நெல்லிக்காய் கெந்தகம் முப்பது களஞ்சு ரசம் பத்துக் களஞ்சு, பெரு மருக்
கும் பூவு சாத்தில் அன்னைக் கண்டு பூத்த பூவ சாத்தில் பத்து நாள் அரைக்க
மெழுகு போலே ஆகும். பிறகு ஒரு விராகனிடை வெங்காரம் கூட கட்டி மூசையால் மூடி
சுருத்திக் கொண்டு உருக்கச் செம்பாம். செம்பு பணவிடை பத்து பத்து மாத்துப் பொன்
மூன்று விராகனிடை ஒரு பணவிடை செம்பு இட்டு உருக்க எல்லாம் செம்பாம்.

<u>வெள்ளி வித்தை</u>:-

பத்து மாத்துப் பொன்னிலே மூன்று பணவிடை செம்பு இட்டு உருக்க எல்லாம்
செம்பாம். அந்த செம்பு பணவிடை வெள்ளி பணவிடை பத்துக் கொன்று கொடுக்க மாடை
மாத்து காணும். வெள்ளீயம் அரிதாரம் சமன் கூட்டி எருக்கம் பால் வார்த்து அரைத்து
வழித்துக் கொண்டு எருக்கம் பழுப்பிலே வைத்து நூல் சுத்திக் கட்டிச் சீலை மண்ணு செய்
து ஆற விட்டு எடுத்து உருக்க வெள்ளியாம்.

<u>நாக வித்தை</u>:-

செருங் கொட்டை கொண்டு வந்து பொடியாக வெட்டி இலுப்பை எண்ணையோடே
போட்டுக் காய்ச்சி வைத்துக் கொண்டு நாகத்தை உருக்கி பதினெட்டுத் தரம் சாய்க்க
நாகம் வலியும் அந்த நாகத்தைப் புளியம் பழம் ஒடு சுட்டு சாம்பலாக்கிக் கொண்டு
சட்டியைக் காய வைத்து பதினைந்து களஞ்சு வலிஞ்ச நாகத்தைப் போட்டு உருகிற
முகத்திலே இந்தச் சாம்பலைப் போட்டு இருப்பு மத்தாலே முடையக் குடைய செந்தூர
மாம். வெள்ளி செம்பிலே கொடுத்துப் பார்க்க சொன்மாம்.

வெள்ளீயம் களஞ்சி.½, இருப்பு பொடி களஞ்சி.1, ரசம் பணவிடை.1 இது
மூன்றும் கூட்டி மந்திச்சு சிவப்பூளை வேரை அரைத்து

பதமாகக் கூட்டி மேலும் கீழும் வைத்துப் பொதிந்து மூன்று சீலை மண் செய்து மூன்று தரம் குகை சிவக்க உருக்கி ஆற விட்டு எடுத்துப் பார்க்க குளிகையாம். செம்பு களஞ்சி உருக்கி அதில் உருக்க வெள்ளியாம். நல்ல முறை.

பாஷாண வேதை:-

வெள்ளைப் பாஷாணம் பொடி பண்ணி திருகு கள்ளிப் பால் வார்த்து வெந்த பிறகு அந்த பற்பம் எடுத்துக் கொண்டு களஞ்சி, செம்பு உருக்கச்சே கால் பணவிடை நீக்கில் வைத்துக் கொடுக்க வெள்ளியாம்.

வெள்ளைப் பாஷாணம் களஞ்சி சங்கு சுட்ட நீர் இரண்டு களஞ்சு சீலையில் மூட்டை கட்டி எலுமிச்சம் பழச் சாறு படி மெருவு கிழங்குச் சாறு படி புளியரணைக் கிழங்குச் சாறு படி ஆக மூன்று படி சாறு குடுவையில் இட்டு டோலாந்திரமாகக் கட்டி மூடி சீலை மண்ணு செய்து அடுப்பு மேல் வைத்துச் சாறு சுண்ட எரி விட்டு இறக்கி கொண்டு செம்பு பத்துக் கொன்று கொடுக்கவும். வெள்ளி ஆகும் நல்ல முறை.

ரசக் கட்டு:-

ரஸ்தாளி வாழைப்பூ ஓட்டின் நடுவே உலர்த்தி வைத்து அதிலே ரசத்தை விட்டு அந்தப் பூவாலே மூடி மூன்று சீலை மண் செய்து மூன்று எருவில் புடம் போட அதே படிக்கி ஐந்து எருவில் புடம் போடவும். ஏழு எருவில் புடம் போடவும். கட்டும்.

கெந்தகக் கட்டு:-

கெந்தகம், வெங்காரம், சமனாய்க் கூட்டி உருக்கவும். இதில் கூட வெடியுப்பு சிறுசு சமனாகக் கூட்டி அரைக்க மெழுகாம். இது வண்ணமாய் கெந்தகம் உருக்கையிலே சவ்வீரம் போடவும். பிறகு சீனக் காரம் போடவும். பிறகு துருசு போடவும். சிவந்த மெழுகாம். அந்த மெழுகை செம்பில் வெள்ளியில் கொடுக்கவும். சொர்னமாகும். நல்ல முறை.

தாளக கட்டு:-

காரம், உப்பு, சவ்வீரம் கூட்டி அரைக்க சிவந்த மெழுகாகும். இது தாளகத்துக்கு கவசம் கொடுத்து வாட்டக் கட்டும். முட்டைத் தயிலத்தில் சீலை நனைத்து அந்தச் சீலையிலே கெந்தகம் பொட்டணம் கட்டி பரப்பி திரியாக திரிச்சு ரசத்தைப் பீங்கானில் விட்டு அந்தத் திரியை கொளுத்தி அந்தச் சுடர் பீங்கானில் விழப் பிடிக்கவும். பிறகு அந்த ரசத்தை மர்திக்க மெழுகாகும். இது பலயோகத்துக்குப் பார்த்துக் கொள்ளவும்.

பாஷாண மெழுகு:-

கரண்டியில் வெடியுப்பு போட்டு உருக்கிக் கொண்டு அதில் பாஷாணம் போட்டு விளக்கெண்ணை சத்தே விட்டுக் கிண்டி எடுத்து அரைக்கவும் மெழுகாகும். இந்த மெழுகை சவ்வீரத்துக்குப் பிடிப்பிக்க வாட்ட கட்டும்.

துருசு கட்டு:-

கரியுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், துருசு, நவச்சாரம், இது வெல்லாங் கூட்டி அரைக்க மெழுகாகும். இந்த மெழுகு துருசிலே பிடிப்பித்து வாட்டக் கட்டும். சித்தம்.

தாளக கட்டு:-

கத்தாழை சாறு படி.உ., தாளகத்துக்குச் சுருக்கு கொடுத்த பின்பு, நாயுருவி இலையும் காரமுங் கூட்டி அரைத்து குகையில் வைத்து உருக்கி அதிலே சவ்வீரம் கொடுத்து பிறகு முன் சுருக்கு கொடுத்த தாளகத்தை அதிலே போட்டு வாட்டி

எடுத்துக் கொள்ளவும். அதை செம்பு ஏழுக்கு மூன்று கொடுத்து இந்த ஏழுக்கு மூன்று வெள்ளி சேர்க்க வயது.4 காணும்.

<u>தாளக கட்டு</u>:-

நவச்சாரம், தாளகம், சீனக்காரம், உப்பு இவை அரைத்து தாளகத்துக்கு கவசம் கொடுத்து காடைப் புடமிடக் கட்டும்.

<u>ரச செந்தூரம் உப்புக் கட்டி வார்க்கப்பட்ட முறை</u>:-

கட்டின ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, பச்சைக் கற்பூரம் விராகனிடை.க, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து காடைப் புடமிட செந்தூரமாம். கை கண்ட முறை.

உப்பு மூசையிலிட்டு ஒடு மூடிக் கரி போட்டு ஊதின பின்பு மணத்தக்காளி யிலை அரைத்து அதிலே போடவுருகும். அதை எடுத்துக் கட்டி வார்க்கவும்.

<u>தாம்பர பற்பம்</u>:-

கள்ளிப் பால் விட்டு கோதம்ப அரிசி அரைத்து குகை பண்ணி அதிலே தாளகம் விராகனிடை.க போட்டு அதின் மேல் தட்டு வைத்து அதின் மேல் தாளகம் போட்டு அந்த மாவு பில்லை மூடி சீலை மண் செய்து கெசபுடமிட பற்பமாம்.

<u>சித்திர முறை</u>:-

துருசு பலம்.க, மிருதார் சிங்கு பலம்.க, இரண்டும் சேர்த்து சிவத்த பிரியங் காய்ச் சாறு உழக்கு க செவ்வகத்தி பசுறு உழக்கு.க, ஆக இரண்டும் சமபாகமாய் கூட்டி இரண்டு சரக்கும் ஒட்டில் வைத்து சுருக்கு கொடுத்து ஆறின பின்பு மூசையில் போட்டு மூடி சீலை மண் செய்து விராட்டியால் புடம் போட அதிலே செம்பு போலே காணும். அதை மூசையில் போட்டு வெங்காரம் விட்டு உருக்க வயது.அ,

<u>காரீய பற்பம்</u>:-

காரீயம் பலம்.க, வெத்திலைச் சாத்தில் ஒன்பது தரம் உருக்கிச் சாய்க்க சுத்தியாம். பின்பு ஒட்டில் ஒமதளமாய் பரப்பி அதின் மேலே கஞ்சாவிலை அரைத்து வைத்து அதின்மேலே வங்கம் வைத்து மூடிச் சீலை மண்ணு செய்து மும்புடமிடப் பற்பமாம்.

<u>அரிதார செந்தூரம்</u>:-

அரிதாரம் கொண்டு வந்து சுண்டைக்காய் போலே உடைத்து சுனியிலே மூட்டை கட்டி கோமுத்திரத்தில் சுண்ட எருவிட்டு பிறகு காடியில் போட்டு சுண்ட எருவிடச் சுத்தியாம். எருக்கிலைச் சாத்தில் அரைத்து பில்லை செய்து சூரியனில் உலத்தி புது ஒட்டில் வைத்து மூடி சீலை மண்ணு செய்து ஆவாரை விறகு விட்டு சாமம் எரிக்க மை போலே செந்தூரம் ஆகும். பணவிடை செந்தூரம் குப்பை மேனிச் சாத்தில் கொடுக்க பதினெட்டு கடி தீரும் நல்ல முறை.

<u>லிங்க மெழுகு</u>:-

வேப்பங் காய்ச் சாறு படி லிங்கம் பலம்.½ இதை அடுப்பின் மேல் ஒட்டில் வைத்து வேப்பம் பால் விட்டு வேப்பங் கொம்பினாலே தளாவ மெழுகாகும். இது சன்னி தோஷம், சுர வாயு, புண்ணு தாம்பு தீரும். இதுகளுக்கு ஆகும். அநுபானம் திரிகடுகு. இச்சா பத்தியம்.

<u>சவ்வீர மெழுகு</u>:-

சவ்வீரம் பலம்.க, முள்ளங்கிச் சாறு படி.வ, சுருக்கு கொடுக்க பயறு போலே உருட்டி வைத்துக் கொண்டு சகல புண்ணுக்கும் மகோதரம், சுரம் இதுக்கெல்லாம் தேனு திரிகடுகு, வெத்திலை அநுபானம் பத்தியம் புளி ஆகாது. உப்புக் கட்டவும்.

கெந்தக மெழுகு:-

வாழைப் பழம் கொண்டு வந்த மூங்கில் மேல் பறளி சீவிப் பேழைத்தில் போட்டுப் பிசறி சட்டியில் வைக்கத் தண்ணீராகும். அந்தத் தண்ணீர் எடுத்து ஆலைக் கரண்டியில் விட்டு கெந்தகம் போட்டு குச்சியால் கிளறி மறுபடி வெங்காயச் சாறு விட்டுக் கிளற மெழுகாகும். அதை எடுத்துப் பரணியில் வைத்துக் கொள்ளவும். சகலமான வியாதிக்கும் கொடுக்கலாம். புளி மோரு, புகையிலை கசப்பு ஆகாது.

சாதிலிங்க மெழுகு:-

சாதிலிங்கம் ஆர்க்கப் பொடி செய்து அந்த தண்ணீரை விட்டு கரண்டியில் பொடி போட்டுக் கிளற மெழுகாகும். சுரம், சன்னி தோஷத்துக்கு கொடுக்கலாம்.

லிங்க முறை:-

லிங்கம் விராகனிடை.உ, மரவட்டை அரைத்து அதிலே லிங்கத்தை வைத்து நன்மையப் பொதிந்து சீலை சுத்தி பேய் எள்ளு எண்ணெயில் போட்டு எரிக்கவும். அதை எடுத்துக் கொண்டு இப்படிக்கு நாலு தரம் வேக வைக்கவும் இதுக்கு வெள்ளி நாலுக்கு ஒன்று கொடுக்கவும்.

ரெத்த மூலத்துக்கு:-

புழுங்கலரிசி படி. ½-க்கு வெள்ளை பூண்டு துக்காணி.க பெரும்பைத் தழை இது மூன்றும் கூட்டி அரைத்து ஒட்டடை தத்தி இரண்டு நேரமும் மூன்று நாள் மூன்று முறை சாப்பிட மூலந் தீரும். இச்சா பத்தியம்.

சுரக் குளிகை:-

சாதிலிங்கம், நாபி, வெண்காரம், திரிகடுகு இது சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு சகல சுரத்துக்கும் இஞ்சி சாறு, சுக்கு கசாயம் முலைப் பாலாகுதல் மணலை வறுத்துத் தண்ணீராவது இதில் கொடுக்கத் தீரும்.

ஒருத் தலை நோவுக்கு:-

மஞ்சள், மிளகு, எருக்கம் பாலில் அரைத்து உலர்த்தி பொடி பண்ணி துணியிர் திரித்து பத்த வைத்து நாசியில் புகை வாங்கத் தீரும்.

****

முற்றும்

****

சு.ச: 25.5.63.

Verified
Sunderamurthy
5/7/63.

தேதி:- 25.5.63.

ஓலைச் சுவடியின் பெயர்:- சிறுநாகச் செந்தூர வேதை. கட்டு-13.

உரிமையாளரின் பெயர்:- சி.வை.சுப்புசாமி செட்டியார்.

இடம்:- காவேரிப்பட்டணம், சேலம்..

***

சிறு நாகச் செந்தூர வேதை.

பால் துத்தம் எள்ளுப் போலே பொடி செய்து அதிலே கட்ட அரைக்கீரைச் சாறு எருமை நட்டாம் கொடிச் சாறு, அனிஞ்சிப் பருப்பு அரைச்சு ஒரு பலம் துத்தம் பொடி பண்ணி கலக்கி முன்னீர் சாறு வார்த்து எல்லாம் கரைத்து டோலேந்திரமாகக் கட்டி எரிக்க சுத்தியாம். துத்தத்தைக் கழுவிப் பேறட்டு முன்பு எரித்த சாத்தைப் பார்த்து திசையில் வைக்கவும். பின்பு சீலை மண்ணு செய்து உலர வைத்து குக்குட புடம் வைக்கவும். செந்தூரமாம். அந்த செந்தூரம், அந்த நாகத்துக்கு நாலுக் கொண்டு கொடுக்கக் கட்டும். கல் பல்கரை எருக்கம் பழுப்புச் சாத்திலரைத்துப் பின்பு செம்பருத்திக் காய்ச் சாத்தில் அரைத்து முச்சியில் வைத்து மூடி சீலை மண் செய்து குக்குடபுடமிட செந்தூரமாகும் இந்தச் செந்தூரம் அந்த நாகத்துக்கு நாலில் ஒரு பங்கு கொடுக்க கட்டும். சங்கு, சுண்ணும்பு, ~~தேங்காய் அளவு~~ மரு தோணியிலே தேங்காய் அளவு அரைத்த புது சுண்ணும்பு தேங்காய் மாத்திரம் இந்த வகை மூன்றும் சமமாய் நிறுத்துக் கொண்டு தண்ணீர் வார்த்துத் தெளிய விட்டு நாலு விசை விறுத்துத் தெளிய வைத்து இறுத்த தண்ணீரை ஒரு சட்டியில் வார்த்துக் காய்ச்சிக் குழம்பாம். பின்னேயும் காய்ச்ச உப்பு போலே குழம்பாம். பிறகு சுத்தி பண்ணின நாகம் நடுவே வைத்து கீழு மேலும் கொளம்பு மூடி அது மேல் ஒரு மூடி நாலு சீலை மண்ணு செய்து கெசபுடம் போட செந்தூரமாம். பிறகு தங்கம் ஒரு பணவிடையும், வெள்ளி பத்து பணவிடையும் உருகிற முகத்திலே இரண்டு பணவிடை செந்தூரம் மூகிலே வைத்து உருட்டிப் போட மாத்து எட்டுக் காணும். நல்ல வித்தை.

கெந்தக_வித்தை:-

நெல்லிக்காய் கெந்தகம் மூப்பது களஞ்சு ரசம் பத்துக் களஞ்சு, பெரு முருக்கம் பூவு சாத்தில் அன்னைக் கண்டு பூத்த பூவ சாத்தில் பத்து நாள், அரைக்க மெழுகு போலே ஆகும். பிறகு ஒரு விராகனிடை வெங்காரம் கூட கட்டி மூசையால் மூடி சுருத்திக் கொண்டு உருக்கச் செம்பாம். செம்பு பணவிடை பத்து பத்து மாத்துப் பொன் மூன்று விராகனிடை ஒரு பணவிடை செம்பு இட்டு உருக்க எல்லாம் செம்பாம்.

வெள்ளி_வித்தை:-

பத்து மாத்துப் பொன்னிலே மூன்று பணவிடை செம்பு இட்டு உருக்க எல்லாம் செம்பாம். அந்த செம்பு பணவிடை வெள்ளி பணவிடை பத்துக் கொண்டு கொடுக்க மாடை மாத்து காணும். வெள்ளீயம் அரிதாரம் சமன் கட்டி எருக்கம் பால் வார்த்து அரைத்து வழித்துக் கொண்டு எருக்கம் பழுப்பிலே வைத்து நாலி சுற்றிக் கட்டிச் சீலை மண்ணு செய்து கழ விட்டு எடுத்து உருக்க வெள்ளியாம்.

நாகு_வித்தை:-

செறாக் கொட்டை கொண்டு வந்து பொடியாக வெட்டி இலுப்பை எண்ணெயோடே போட்டுக் காய்ச்சி வைத்துக் கொண்டு நாகத்தை உருக்கி பதினெட்டுத் தரம் சாய்க்க நாகம் வலியும் இந்த நாகத்தைப் புளியம் பழம் ஒரு சீட்டு சாம்பலாக்கிக் கொண்டு சட்டியைக் காய வைத்து பதினைந்து களஞ்சு வலித்த நாகத்தைப் போட்டு உருகிற முகத்திலே இந்தச் சாம்பலைப் போட்டு இருப்பு மத்தாலே நடையக் கடைய செந்தூரமாம். வெள்ளி செம்பிலே கொடுத்துப் பார்க்க சொன்னமாம்.

வெள்ளீயம் களஞ்சி.½, இருப்பு பொடி களஞ்சி.1, ரசம் பணவிடை.1 இது மூன்றும் கட்டி மத்திச்சு சிவப்பூளை வேரை அரைத்து

பதமாகக் கட்டி மேலும் கீழும் வைத்துப் பொதிந்து மூன்று சீலை மண் செய்து மூன்று தரம் குகை சிவக்க உருக்கி ஆற விட்டு எடுத்துப் பார்க்க குளிகையாம். செம்பு களஞ்சி உருக்கி அதில் உருக்க வெள்ளியாம். நல்ல முறை.

பாஷாண_வேதை:-

வெள்ளைப் பாஷாணம் பொடி பண்ணி திருகு கள்ளிப் பால் வார்த்து வெந்த பிறகு அந்த பற்பம் எடுத்துக் கொண்டு களஞ்சி, செம்பு உருக்கச்சே கால் பணவிடை நிக்கில் வைத்துக் கொடுக்க வெள்ளியாம்.

வெள்ளைப் பாஷாணம் களஞ்சி சங்கு சுட்ட நீர் இரண்டு களஞ்சு சீலையில் மூட்டை கட்டி எலுமிச்சம் பழச் சாறு படி மெருகு கிழங்குச் சாறு படி புளியரளைக் கிழங்குச் சாறு படி ஆக மூன்று படி சாறு குடுவையில் இட்டு டோலாந்திரமாகக் கட்டி மூடி சீலை மண்ணுஞ் செய்து அப்பு மேல் வைத்துச் சாறு வற்ற எரி விட்டு இறக்கி கொண்டு செம்பு பத்துக் கொன்று கொடுக்கவும். வெள்ளி ஆகும் நல்ல முறை:

ரசக்_கட்டு:-

ரஸ்தாளி வாழைப்பூ ஓட்டின் நடுவே உலர்த்தி வைத்து அதிலே ரசத்தை விட்டு அந்தப் பூவாலே மூடி மூன்று சீலை மண் செய்து மூன்று எருவில் புடம் போட அதே படிக்கி ஐந்து எருவில் புடம் போடவும். ஏழு எருவில் புடம் போடவும். கட்டும்.

கெந்தகக்_கட்டு:

கெந்தகம், வெங்காரம், சமஎடைக் கட்டி உருக்கவும். இதில் கூட வெடியுப்பு சிறுக சமமாகக் கட்டி அரைக்க மெழுகாம். இது வண்ணமாய் கெந்தகம் உருக்கையிலே சவ்வீரம் போடவும். பிறகு சீனக் காரம் போடவும். பிறகு துருசு போடவும். சிவந்த மெழுகாம். அந்த மெழுகை செம்பில் வெள்ளியில் கொடுக்கவும். சொர்ணமாகும். நல்ல முறை.

தாளக_கட்டு:-

காரம், உப்பு, சவ்வீரம் கட்டி அரைக்க சிவந்த மெழுகாகும். இது தாளகத்துக்கு கவசம் கொடுத்து வாட்டக் கட்டும். முட்டைத் தைலத்தில் சீலை நனைத்து அந்தச் சீலையிலே கெந்தகம் பொட்டலம் கட்டி பரப்பி திரியாக திரிச்சு ரசத்தைப் பீங்கானில் விட்டு அந்தத் திரியை கொளுத்தி அந்தச் சுடர் பீங்கானில் விழப் பிடிக்கவும். பிறகு அந்த ரசத்தை மத்திக்க மெழுகாகும். இது பலயோகத்துக்கும் பார்த்துக் கொள்ளவும்.

பாஷாண_மெழுகு:-

கரண்டியில் வெடியுப்பு போட்டு உருக்கிக் கொண்டு அதில் பாஷாணம் போட்டு விளக்கெண்ணெய் சத்தே விட்டுக் கிண்டி எடுத்து அரைக்கவும் மெழுகாகும். இந்த மெழுகை சவ்வீரத்துக்குப் பிடிப்பிக்க வாட்ட கட்டும்.

துருசு_கட்டு:-

கரியுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், துருசு, நவச்சாரம், இது வெல்லாங் கட்டி அரைக்க மெழுகாகும். இந்த மெழுகு துருசிலே பிடிப்பித்து வாட்டக் கட்டும். சித்தம்.

தாளக_கட்டு:-

கத்தாழை சாறு படி.உ, தாளகத்துக்குச் சுருக்கு கொடுத்து பின்பு நாயுருவி இலையும் காரமுங் கட்டி அரைத்து குகையில் வைத்து உருக்கி அதிலே சவ்வீரம் கொடுத்து பிறகு முன் சுருக்கு கொடுத்த தாளகத்தை அதிலே போட்டு வாட்டி

எடுத்துக் கொள்ளவும். அதை செம்பு எருக்கு நீர் கொடுத்து இந்த எருக்கு மூன்று வெள்ளி சேர்க்க வயது.௪ காணும்.

தாளக கட்டு:-

நவச்சாரம், தாளகம், சீனக்காரம், உப்பு இதை அரைத்து தாளகத்துக்கு கவசம் கொடுத்து காடைப் புடமிடக் கட்டும்.

ரச செந்தூரம் உப்புக் கட்டி வார்க்கப்பட்ட முறை:-

கட்டின ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, பச்சைக் கற்பூரம் விராகனிடை.க, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து காடைப் புடமிட செந்தூரமாம். கை கண்ட முறை.

உப்பு மூசையிலிட்டு ஒரு மூடிக் கரி போட்டு அதின் பின்பு மணத்தக்காளியிலே அரைத்து அதிலே போடவுருகும். அதை எடுத்துக் கட்டி வார்க்கவும்.

தாம்பர பற்பம்:-

கள்ளிப் பால் விட்டு கோதம்பை அரிசி அரைத்து அதை பண்ணி அதிலே தாளகம் விராகனிடை.க போட்டு அதின் மேல் கட்டு வைத்து அதின் மேல் தாளகம் போட்டு அந்த மாவு பில்லை மூடி சீலை மண் செய்து கெசபுடமிட பற்பமாம்.

சித்திர முறை:-

அருக பலம்.க, மிருதார் சிங்கு பலம்.க, இரண்டும் சேர்த்து சிவத்த பிரியங் காய்ச் சாறு உழக்கு க செவ்வகத்தி பசுவ உழக்கு.க, ஆக இரண்டும் சமபாகமாய் கட்டி இரண்டு சரக்கும் ஓட்டில் வைத்து சுருக்கு கொடுத்து அதின் பின்பு மூசையில் போட்டு மூடி சீலை மண் செய்து விராட்டியால் புடம் போட அதிலே செம்பு போலே காணும். அதை மூசையில் போட்டு வெங்காரம் மிட்டு உருக்க வராகன்.அ,

காரீய பற்பம்:-

காரீயம் பலம்.க, வெற்றிலைச் சாற்றில் ஒன்பது தரம் உருக்கிச் சாய்க்க சுத்தியாம். பின்பு ஓட்டில் ஓமதளமாய் பரப்பி அதின் மேலே கற்சாளிலை அரைத்து வைத்து அதின் மேலே வங்கம் வைத்து மூடிச் சீலை மண்ணு செய்து முழுப்புடமிடப் பற்பமாம்.

அரிதார செந்தூரம்:-

அரிதாரம் கொண்டு வந்து சுண்டைக்காய் போலே உடைத்து துணியிலே மூட்டை கட்டி கோமூத்திரத்தில் அண்ட எருவிட்டு பிறகு சாடியில் போட்டு கண்ட எருவிடச் சுத்தியாம். எருக்கிலைச் சாற்றில் அரைத்து பில்லை செய்து சூரியனில் உலர்த்தி புது ஓட்டில் வைத்து மூடி சீலை மண்ணு செய்து ஆவாரை விறகு விட்டு சாமம் எரிக்க மை போலே செந்தூரம் ஆகும். ௧ பணவிடை செந்தூரம் குப்பை மேனிச் சாற்றில் கொடுக்க பதினெட்டு கடி தீரும் நல்ல முறை.

லிங்க மெழுகு:-

வேப்பங் காய்ச் சாறு படி லிங்கம் பலம்.௨ இதை அடுப்பின் மேல் ஓட்டில் வைத்து வேப்பம் பால் விட்டு வேப்பங் கொம்பினாலே துளாவ மெழுகாகும். இது சன்னி தோஷம், சுர வாய்வு, புண் குறு நமைப்பு தீரும். இது கருக்கு ஆகும். அனுபானம் திரிகடுகு. இச்சா பத்தியம்.

சவ்வீர மெழுகு:-

சவ்வீரம் பலம்.க, முள்ளங்கிச் சாறு படி.௨, சுருக்கு கொடுக்க பயறு போலே உருட்டி வைத்துக் கொண்டு சகல புண்ணுக்கும் மகோதரம், சுரம் இதுக்கெல்லாம் தேற திரிகடுகு, வெற்றிலை அனுபானம் பத்தியம் புளி ஆகாது. உப்புக் கட்டவும்.

கெந்தக மெழுகு:-

வாழைப் பழம் கொண்டு வந்து தோலின் மேல் பஞ்சி சீவிப் பேழத்தில் போட்டுப் பிழிந்து சட்டியில் வைக்கத் தண்ணீராகும். அந்தத் தண்ணீர் எடுத்து அதைக் கரண்டியில் விட்டு கெந்தகம் போட்டு குச்சியால் கிளறி மறுபடி வெங்காயச் சாறு விட்டுக் கிளற மெழுகாகும். அதை எடுத்துப் பரணியில் வைத்துக் கொள்ளவும். சகலமான வியாதிக்கும் கொடுக்கலாம். புளி மோரு, புகையிலை கட்டு கொரு.

சாதிலிங்க மெழுகு:-

சாதிலிங்கம் தூர்க்கப் பொடி செய்து அந்த தண்ணீரை விட்டு கரண்டியில் பொடி போட்டுக் கிளற மெழுகாகும். சுரம், சன்னி தோஷத்துக்கு கொடுக்கலாம்.

லிங்க முறை:-

லிங்கம் விராகனிடை.உ, மரவட்டை அரைத்து அதிலே லிங்கத்தை வைத்து நன்றாய்ப் பொதிந்து சீலை சுத்தி பேய் எள்ளு எண்ணெயில் போட்டு எரிக்கவும். அதை எடுத்துக் கொண்டு இப்படிக்கு நாலு தரம் வேக வைக்கவும் இதுக்கு. வெள்ளி நாளுக்கு ஒன்று கொடுக்கவும்.

ரெத்த மூலத்துக்கு:-

புழுங்கலரிசி படி.½-க்கு வெள்ளை பூண்டு முக்காணி.உ பெரும்பைத் தழை இது மூன்றும் கூட்டி அரைத்து ஒட்டடை தட்டி இரண்டு நேரமும் மூன்று நாள் மூன்று முறை சாப்பிட மூலம் தீரும். இச்சா பத்தியம்.

சுரக் குளிகை:-

சாதிலிங்கம், நாபி, வெண்காரம், திரிகடுகு இது சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு சகல சுரத்துக்கும் இஞ்சி சாறு, சுக்கு கஷாயம் முலைப் பாலாகுதல் மண்டல வந்திருந்த. தண்ணீராவது இதில் கொடுக்கத் தீரும்.

ஒருத் தலை நோவுக்கு:-

மஞ்சள், மிளகு, எருக்கம் பாலில் அரைத்து உலர்த்தி பொடி பண்ணி துணியில் திரித்து பத்த வைத்து நாசியில் புகை வாங்கத் தீரும்.

****

முற்றும்

****

சு.ச:25.5.63.